# பாடம் 39: திருநிலைகள் (ஆயர்கள்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (9 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (12 வயது) | : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (15 வயது) | : 1 முதல் 14 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
திருநிலைகள் அருளடையாளத்தில் திருத்தொண்டர்கள் மற்றும் குருக்கள் குறித்து நாம் கற்றுள்ளோம். திருநிலைகளில் திருப்பணியாளரின் உயர்ந்தத் தரநிலை ஆயருடையதாக இருக்கிறது, இந்த ஆயர்கள் குறித்து நாம் இந்த பாடத்தில் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. புதிய ஏற்பாடும் திருப்பணியின் முப்பிணை படிமைக்குள் உயர்ந்த தரநிலையாக, ஆயரைக் காட்டுகிறது:

*1 திமொத்தேயு 3:1-2*: "இந்த கூற்று உண்மையானது: கண்காணிப்பாளர் (*எப்பிஸ்கொப்பேஸ்*) பொறுப்பை நாடுகிற எவரும் மேன்மையானப் பணியை விரும்புகிறார். ஆகவே, ஒரு கண்காணிப்பாளர் (*எப்பிஸ்கொப்போன்*) கண்டனத்துக்கு ஆளாகாதவராக, ஒருமுறை மட்டும் திருமணம் செய்தவராக, தெளிவுள்ளவராக, தற்கட்டுப்பாடுள்ளவராக, மதிப்புக்குரியவராக, விருந்தோம்புகிறவராக, கற்பிக்க இயலுகிறவராக இருக்க வேண்டும்."

*தீத்து 1:7,9*: "கடவுளின் பொறுப்பாளராக உள்ள ஒரு கண்காணிப்பாளர் (*எப்பிஸ்கொப்போன்*) பழிச்சொல்லுக்கு ஆளாகாதவராக இருக்க வேண்டும், ... தமக்கு கற்பிக்கப்பட்ட உண்மை சேதியைப் பற்றியிருந்தால், சரியான கோட்பாட்டை உரக்கக் கற்பிக்கவும், முரண்படுவோருக்கு மறுத்துரைக்கவும் அவரால் இயலும்."

2. *கதிம 1555*: "திருச்சபையின் தொடக்கக் காலங்களில் இருந்தே செயலாக்கப் பெறும் பல்வேறு அலுவல்கள் நடுவே, மரபின் சாட்சியத்தின்படி, ஆயர் என்ற மாண்புக்கும் பொறுப்புக்கும் நியமிக்கப்படுகிறவர்கள் வழியாகச் செய்யப்படும் பணியே தலைமை இடம் வகிக்கிறது, திருத்தூதரிய வரிசையைக் கடத்துவோராகத் தொடரும் அவர்களின் முறிபடாத வழிவருதல் தொடக்கம் வரை பின்னோக்கிச் செல்கிறது."

*கதிம 1556*: "தங்களது மேலான எய்துபணியை நிறைவேற்ற, 'தூய ஆவியாரின் சிறப்பு பொழிவு கிறிஸ்துவால் திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்டது, மேலும் கைகளை வைத்ததன் வழியாக அவர்கள் ஆவியாரின் கொடையைத் தங்கள் துணையர்களுக்கு வழங்கினார்கள், அது ஆயர் திருநிலைப்பாடு வழியாக நமது நாள் வரையிலும் கடத்தப்படுகிறது.'"

3. *உலகின் ஒளி,* 20: "ஆயர்கள்... தங்கள் உதவியாளர்களான குருக்கள் மற்றும் திருத்தொண்டர்களோடு, குழுமத்திற்கானப் பணியைச் செய்து, அவர்களின் மேய்ப்பர்களாக, கோட்பாட்டின் ஆசிரியர்களாக, புனித வழிபாட்டின் குருக்களாக, ஆளுகின்றத் திருப்பணியாளர்களாக, மந்தை மீது கடவுளின் இடத்தில் இருந்து நடத்துகிறார். திருத்தூதர்கள் நடுவே முதல்வரான பேதுருவுக்குத் தனிப்பட்ட விதத்தில் வழங்கப்பட்ட அலுவல், நிரந்தரமானதாகவும் தமது வழிவருகிறவருக்குக் கடத்தக்கூடியதாகவும் இருக்கிறது போன்று, திருச்சபையை ஊட்டிவளர்க்கும் திருத்தூதர்களின் அலுவலும் நிரந்தரமானது, மேலும் அது ஆயர்களின் புனிதத் திருநிலையால் இடையூறின்றிச் செயலாக்கப்பட வேண்டும். ஆகவே, ஆயர்கள் இறை நிறுவுதலால் திருத்தூதர்களின் இடத்தில், திருச்சபையின் மேய்ப்பர்களாக வழிவருகின்றனர், மேலும் அவரைச் செவியுறுகிறவர் கிறிஸ்துவைச் செவியுறுகிறார், அவர்களைப் புறக்கணிப்பவர் கிறிஸ்துவையும் அவரை அனுப்பியவரையும் புறக்கணிக்கிறார்."

4. ஆயர்கள் எப்பொழுதும் மணத்துறவு கொண்ட ஆண்களாக இருக்க வேண்டும், ஒருபோதும் அதற்கு விதிவிலக்கு சாத்தியமில்லை. ஏனெனில், அவர் திருநிலைகள் அருளடையாளத்தின் முழுமைக்குள் அழைக்கப்பட்டுள்ளார், இயேசு கிறிஸ்துவின் உண்மை திருத்தூதர்களின் வழிவந்தவராக தலைமை குருவின் வகிநிலையைத் தாம் எடுத்துக்கொள்கிறார். மற்றச்

சொற்களில், தூய கத்தோலிக்கத் திருச்சபை என்ற மணவாட்டியை ஏற்கெனவே கொண்டுள்ள இயேசு கிறிஸ்து என்ற நபருக்குள் அவர் முழுமையாக வடிவாக்கப் பெற்றுள்ளார்.

5. முன்னர் திருமணம் முடித்த ஆண்கள் ஆயர்களாக முடியுமென புதிய ஏற்பாடு கூறுவதாகத் தெரிவது ஏன்? இது ஏனெனில், முதல் தலைமுறை கிறிஸ்தவர்களின் காலத்தில் பல திருமணமான ஆண்கள் குருக்களாகவும் ஆயர்களாகவும் ஆகுமாறு அழைக்கப்பட்டனர். குருத்துவத்திற்கு மணத்துறவு கொண்ட ஆண்களை கண்டுபிடிப்பது கடினமானதாக இருந்தது, ஏனெனில் அவர்கள் இயேசுவை உய்த்துணர்ந்து பின்பற்றத் தொடங்கியக் காலத்திலேயே, அவர்கள் ஏற்கெனவே திருமணம் முடித்த ஆண்களாக இருந்தனர். ஆகவே, அவர்கள் திருமணமான நிலையில் குருக்களாகவும் ஆயர்களாகவும் ஆனாலும், ஆயர்களாக ஆனவர்கள் தங்கள் மனைவியரிடம் இருந்து தனித்து வாழ்ந்தனர். ஒரு ஆண் முன்னரே மனைவியை இழந்து இரண்டாவது திருமணம் செய்திருந்தால், அவர் ஓர் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட மாட்டார்.

6. ஓர் ஆயர் வழக்கமானச் சொற்களில் ''ஆயர்'', அல்லது முறையானச் சூழமைவுகளில் (ஆயர்களுக்கு) ''உமது ஆட்சித்துவத்தில்'', ''ஆண்டகை'' அல்லது (பேராயர்களுக்கு) ''உமது அருளில்'' என்று அழைக்கப்படுகிறார். எழுத்தில், தலப் வழக்கிற்கு ஏற்ப மரியாதைக் குறிப்போடு சுட்டப்படுகின்றனர் (''தகைமைசால்'', ''மேதகு'', அல்லது ''பெருந்தகை'').

7. குரு செய்கின்ற அனைத்தோடும் கூடுதலாக, ஓர் ஆயர் உறுதிபூசுதல் அருளடையாளமும் வழங்குகிறார். அவர் திருநிலைகளின் எந்த மட்டத்திலும் மற்ற ஆண்களை திருநிலைப் படுத்தவும் செய்கிறார். ஆயராகத் திருநிலைப்பாடு பெற்ற ஒரு நபர் தல வழமராக, அதாவது ஒரு நிலப்பகுதியின் பொறுப்பு ஆயராக இருக்கலாம் அல்லது இல்லாது போகலாம்.

8. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் ஒரு குரு அணிவதோடு கூடுதலாக, ஓர் ஆயர் ஒரு மகுடணி (தலைச்சீரா) அணிகிறார், ஒரு செங்கோல் (மேய்ப்பரின் கோல்) வைத்துள்ளார், மேலும் எல்லா நேரங்களிலும் ஆயருக்குரியத் தமது கணையாழி அணிந்திருக்கிறார்.

9. திருவழிபாட்டுச் சூழமைவுகளுக்கு வெளியே, அருள்பணியாளர்கள் எல்லா நேரங்களிலும் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறதைத் திருச்சபை சட்டம் கடமையாக்கியுள்ளது (சட்டம் 284). அது உரிமையும் கடமையும் ஆகும். (மலேசியாவில் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறது கட்டாயமில்லை என்றத் தல வழக்கம் உருவாகியுள்ளது.)

10. மற்ற அருள்பணியாளர்களின் புறவழி அருள்பணி உடைகளோடு கூடுதலாக, ஓர் ஆயர் ஒரு மார்புச் சிலுவை, ஊதா நிறப் பட்டிகை (தமது மணிக்கட்டுக்கு மேலமையும் பட்டை), மற்றும் ஊதா நிற குடுவம் (உச்சந்தலை தொப்பி), அவரது அங்கியும் ஊதா மடிவிளிம்பு கொண்டுள்ளது.

11. ஆயருக்கும் பேராயருக்கும் இடையே மிகச் சிறிய வேறுபாடுகளே இருக்கின்றன. (அதன் தனித்துவமான வரலாறு அல்லது அமைவிடத்தின் காரணமாக) ''உயர் மறைமாவட்டம்'' என்று அழைக்கப்படும் தனிச்சிறப்பான பீடத்தில் நியமிக்கப்படும் ஓர் ஆயருக்கு, வழக்கமாக, 'பேராயர்' என்றப் பட்டம் வழங்கப்படுகிறது. இந்த பட்டம் இயல்பிலே மதிப்புக்குரியது, மற்ற ஆயர்களை விட உயர்ந்த தரநிலையைப் பேராயருக்கு வழங்குவதில்லை.

12. ஒரு பேராயர், ''முக்கியத்துவம் குறைந்த'' மறைமாவட்டங்களால் சூழப்பட்ட ஒரு பெருநகர உயர்மறைமாவட்டத்தின் ஆயராகவும் இருக்கலாம். கோலா லம்பூர் உயர் மறைமாவட்டம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, இது பெனாங் மற்றும் மலாக்கா ஜோகூர் மறைமாவட்டங்களில் பெருநகர உயர்மறைமாவட்டமாக இருக்கிறது. இது போன்றவற்றில், பெனாங் மற்றும் மலாக்கா ஜோகூர் மறைமாவட்டங்கள் துணைநிலை மறைமாவட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு பெருநகரப் பேராயராக இருக்கிறவர், துணைநிலை மறைமாவட்டங்கள் மீதான ஆட்சியில் தனித்துவமான கூடுதல் அதிகாரங்களை உரித்தாக்குவதில்லை.

13. திருத்தந்தை என்பவர் ரோமையின் ஆயராக இருக்கிறார், மேலும் அவர் ரோமையின் ஆயராக இருக்கிறதன் வழியாகத் திருத்தந்தை ஆகிறார் (இவர் திருத்தூதர்களின் தலைவரான பேதுருவின் வழிவந்தவராக இருக்கிறார்). மற்ற ஆயர்கள் தங்களுக்கு முந்திய ஆயர்களின் வழிவந்தவர்களாக இருந்தாலும், ஒரு திருத்தந்தை தமக்கு முந்திய திருத்தந்தையின் வழிவந்தவராக அன்றி பேதுருவின் வழிவந்தவராக இருக்கிறார். ஒரே, தூய, கத்தோலிக்க,

திருத்தூதரியத் திருச்சபையின் உச்சமான மற்றும் உலகளாவிய மேய்ப்பராக இருக்கிறதால், திருத்தந்தை உலகளாவியத் திருச்சபைக்கான ஒற்றுமையின் குறியீடாகத் திகழ்கிறார்.

14. திருத்தந்தையால் நியமிக்கப்படும் ஒரு கர்தினாலுக்கு, வழக்கமாக ஆயர் தரநிலை வழங்கப்படுகிறது (இருப்பினும் ஒரு குரு கர்தினாலாக உயர்த்தப்படும் பொழுது, ஆயர் திருநிலைப்பாட்டை மறுத்தால் திருத்தந்தையால் விலக்கீடு அளிக்கப்படுகிறது). திருத்தந்தை இறந்தால் அல்லது பணித்துறப்பு செய்தால், புதியத் திருத்தந்தையைத் தேர்ந்தெடுப்பது ஒரு கர்தினாலின் முக்கியப் பொறுப்பாக இருக்கிறது (80 வயதுக்கு கீழுள்ள கர்தினால்கள் மட்டுமே வாக்களிக்கத் தகுதியானவர்கள்). ஒரு கர்தினாலுக்கு திருத்தந்தையால் சிறப்பு பொறுப்புகளும் வழங்கப்படலாம். கர்தினால்கள் அடிக்கடி ‘‘திருச்சபையின் இளவரசர்கள்’’ என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். அவர்களின் நிறமாக மறைச்சாட்சியத்தைக் குறித்துக் காட்டும் சிவப்பு இருக்கிறது, அதாவது கத்தோலிக்க விசுவாசத்தைத் தற்காக்க தங்கள் குருதியைச் சிந்தவும் அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.